# பராமரிப்பு இல்லங்கள் (**Fosterhjem**) பற்றிய தகவல் கூட்டம்

சிறு பராயத்தில் புறக்கணிப்பை அனுபவித்த சிறார்களுக்கு ஒரு புதிய பராமரிப்பு அவர்களின் வளர்ச்சிக்குத் தேவைப்படலாம். இவை கத்தோலிக்க பின்னணியுடனான சிறார்கள் மற்றும் இளம்பருவத்தினருக்கும் பொருந்தும்.

இத்தேவைகளை பூர்த்திசெய்ய அதிக பராமபிப்பு இல்லங்களின் தேவை அவசியம். பராமரிப்பு தேவைப்படும் சிறார்களின் உறவினர்கள், தெரிந்தவர்கள் அல்லது நலன் விரும்பிகளின் குடும்பங்கள் சிறார்களுக்கான அல்லது இளையோருக்கான இல்லங்களாக அங்கீகரிக்க ப்படலாம்.

பேர்கன் பராமரிப்பு சேவை, புனித பவுல் பங்கின் ஒத்தாசையுடன் பராமரிப்பு இல்லங்கள் பற்றி அறிய ஆவலாக இருப்போருக்கான தகவல் பரிமாற்ற கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

காலம்: வியாழக்கிழமை 15.03.2018 18.30 மணியிலிருந்து 20.30 மணிவரை

இடம்: புனித பவுல் பாடசாலை **Personalrom**

பராமரிப்பு சேவை ஆலோசகர்களஇ இல்லங்கள் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குவதோடு உங்கள் கேள்விகளுக்கான பதில்களை வழங்குவதுடன் பராமரிப்பு இல்ல வேலைகள் பற்றிய விளக்கங்களையும் தெரிவிப்பார்கள்.

கீழ் காண்பவை பற்றிய விளக்கங்கள்:

- பராமரிப்பு சிறார்
- சிறார் பெற்றோரிடமிருந்து பிரியவேண்டிய காரணம்
- யார் பராமரிப்பு பெங்றோர் ஆக முடியும்
- நீங்கள் எவ்வாறு பராமரிப்பாளராகலாம்
- யாருடன் ஒத்துழைக்க வேண்டும்
- பொருளாதாரம் மற்றும் உரிமைகள்
- அவசர பராமரிப்பு இல்லங்கள், குடும்ப வீடுகள்
- இளவயது புலம்பெயர்ந்த சிறார்களுக்கான பராமரிப்பு இல்லங்களின் அவசியம்.

நீங்கள் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள முடியாவிட்டால், பராமரிப்பு சேவை ஆடி மாதம் தவிர்ந்த ஏனைய மாதங்களில் ஏற்பாடு செய்யும் மாதாந்த சந்திப்புகளில் கலந்து கொள்ளலாம். மேலதிக தகவல்களை fosterhjem.no என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம். பதிவுகளுக்கு:

சந்திப்புகளை சிறப்பாக நடாத்த உதவும் முகமாக பங்குபெறுபவர்கள் முன்கூட்டியே பதிவு செய்தல் விரும்பத்தக்கது. பதிவு செய்யத் தவறினால் அல்லது வேறு யாருடனும் சேர்ந்து கலந்து கொள்ள விரும்புவோருக்கு வாய்ப்புகள் உண்டு.

கலந்துரையாடலுக்கு பொறுப்பு:

மேலதிகதொடர்புகளுக்கு சிறார் பராமரிப்பு சேவை – fosterhjemtjenesten


guro.aarvik@bufetat.no mobil: 466 19 364

evy.kristin.jamne@bufetat.no mobil: 466 15 137